# பல்லவர்காலச் செப்பேடுகளில் வரி விலக்குகள்

# Tax Exemptions on Pallava Copper Plates

***முனைவர் சு. சொர்ணரேகா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
த.உ.க. கலைக்கல்லூரி, தஞ்சாவூர், இந்தியா

**Dr. S. Swarnarekha**
*Assistant Professor, Department of Tamil*
*T.U.K. Arts College, Tanjore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*பண்டைய தமிழரின் வரலாறு பழக்கவழக்கம், பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றை அறியத் தொல்லியல் ஆய்வு, நாணயம், ஓவியம், சிற்பம், இலக்கியம், கல்வெட்டு போன்றவற்றின் பயன்பாட்டைப் போல செப்பேடுகளின் பயன்பாடும் பெரிதும் உதவுகிறது. குறிப்பாகத் தமிழகத்தைக் கி.பி.3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9 ஆம் நூற்றாண்டு வரை காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை ஆட்சி புரிந்தவர்கள் பல்லவர்கள். சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களான சேர சோ ழ பாண்டிய மன்னர்களுக்குப் பின் களப்பிரரை வென்று ஆட்சி செய்தவர்கள் பல்லவர்கள். இவர்களது வரலாற்றை அறியப் போதுமான இலக்கியச் சான்றுகள் இல்லாத நிலையில் அவர்களது கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பல்லவர் வரலாற்றை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடிகளாகத் திகழ்கின்றன. அவ்வகையில் அதிக செப்பேடுகளை வெளியிட்ட பெருமைக்குரியவர்கள் பல்லவர்கள். அவர்கள் விட்டுச் சென்ற செப்பேடுகளின் வழியாக அறியப்படும் வரி விலக்குகளை ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***ஆய்வு நோக்கம்:***

*செப்பேடுகள், வரிவிலக்கு, பல்லவர் காலம், கப்பம்.*

## Abstract

*Like the use of archaeology, coinage, painting, sculpture, literature and epigraphy, copper plates help us to know about the history, customs, culture, civilization and life of the ancient Tamils. The Pallavas ruled Tamil Nadu from 3rd century AD to 9th century AD with Kanchipuram as their capital. The Pallavas were the successors of the Chera, Chola and Pandya kings who ruled Tamilnadu during the Sangam Age. In the absence of sufficient literary evidence, their inscriptions and copper plates serve as mirrors of Pallava history. The Pallavas are credited with the publication of the largest number of copper plates. The purpose of this study is to examine the tax exemptions known from the copper plates left by them.*

***Keywords:***

*Copper Plates, Tax Exemption, Pallava Period, Kappam.*

**Citation**

Swarnalatha, S. “Tax Exemptions on Pallava Copper Plates.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 82–87.

**முன்னுரை**

*தொன்றுதொட்டு வரும் பண்டைய வரலாற்றை அறிதற்குரிய ஆதாரங்களுள் ஓலைச்சுவடிகளுக்கு அடுத்த பரிணாம வளர்ச்சி நிலையில் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் உள்ளன. மன்னராட்சி காலத் தமிழக வரலாற்றை அறிய துணை நிற்கும் சான்றாகச் செப்பேடுகள் திகழ்கின்றன. இச்செப்பேடுகளில் பழங்கால மன்னர்களின் கோயில் நிலக்கொடைகள், வம்சாவளி, போர்க் குறிப்புகள், மரபுவழிக் கதைகள் போன்ற செய்திகளைக் காணமுடிகிறது. பல்லவ மன்னர்கள் வழங்கிய தானங்களுக்கு வரலாற்றாதாரமாக ஆவணமாக இருப்பவை செப்பேடுகளாகும். இதில் காணலாகும் பல்வேறு வரிவிலக்குகளை எடுத்துரைக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.*

**பல்லவர்கள்**

*தமிழக வரலாற்றில் மூவேந்தர் ஆட்சிக்குப் பின்பு நான்காம் அரச மரபாகக் காலூன்றிச் சற்றொப்ப 650 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்தவர் என்ற பெருமை பல்லவருக்குண்டு. சாதவாகனப் பேரரசில் தலைவர்களாக இருந்த இவர்கள், அப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்பு இவர்களின் நிர்வாகத்திலிருந்த நிலப்பரப்பை அரசாளத் தொடங்கினர் என்பது வரலாறு. "பல்லவர்" எனும் சொல்லாட்சி குறித்து, இந்திய வரலாற்று நூலாசிரியரான வின்ஸென்ட் ஸ்மித் என்பார்,*

> *பகலவர் என்னும் சொல்லைப் பல்லவர் என்னும் சொல்லோடு ஒப்பிட்டுப் பார்த்து ஒப்புமை மட்டுமே கொண்டு பல்லவர் பாரசீகர் எனக் கூறுதல் தவறு பல்லவர் தென்னிந்தியரே ஆவர் (மா.இராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு, ப.33)*

*என்ற முடிவைக் கூறியுள்ளார்.*

*இலங்கையிற் சிறந்த ஆராய்ச்சியாளராக இருந்த இராசநாயகம் என்பவர்,*

> *இலங்கையை அடுத்துள்ள மணிபல்லவம் (காரைத்தீவு) பல்லவர்களின் பிறப்பிடமாகும். மணிமேகலையில் கூறப்பட்டுள்ள சோழனை மணந்த பீலிவளை என்பவள் நாகர் மகள் ஆவாள். அவள் பெற்ற மைந்தனே திரையால் கடத்தப்பட்டுக் கரை சேர்ந்த முதல் பல்லவன். அவன் தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டு இருந்தமையால் தொண்டைமான் என்றும், திரையால் உந்தப்பட்டு வந்தமையால் திரையன் என்றும் வழங்கப்பட்டான். அவன் மரபினரே தம் தாயகப் பெயரைத் தாங்கி (மணி பல்லவம்) பல்லவர் எனப்பட்டனர். பல்லவ முதல் அரசன் பெரும்பாணாற்றுப்படையில் புகழ்பெற்றத் தொண்டைமான் இளந்திரையன் ஆவான் (*Indian Antiquary, vol.III, pp.*75-80)*

*என விளக்கியுள்ளார். இதனை மெய்ப்பிப்பது போலப் பல்லவர்களின் செப்பேடுகளிலும் தங்களது தாய் வழியாக நாகக்கன்னிகையைக் குறிப்பிட்டுள்ளனர். வேலூர்ப் பாளையம் செப்பேட்டில் பல்லவர்களின் முன்னோரான வீரக்கூர்ச்சரன் நாகராஜன் மகளை மணந்து அவளோடு வந்த அரசைத் தனக்கு உரிமை ஆக்கினான் என்று சொல்லப்பட்டுள்ளது என்ற செய்தியும் பல்லவர் வரலாற்றை அறிய உதவுகிறது.*

**வரி-இலக்கியச் சான்றுகள்**

*வரி என்னும் சொல் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. "இறை" என்பது வரியைக் குறிக்கும். மக்கள் செலுத்திய வரியும், பகைவர் கொடுத்த கப்பமும், வணிகத்துக்கு விதித்த உல்கும் அரசருடைய வருவாயாக இருந்தன. அரசுக்கு ஆறில் ஒரு பங்கு வரியாக மக்கள் செலுத்தியதைப் பிற்கால உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். மக்களின் அன்பு*

*கெடுமாறு வரி வாங்கினால் யானை புக்கப் புலம் போல நாடும் கெடும் மன்னனும் கெடுவான் எனப் பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவுறுத்தினார்.*

***அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே***
***கோடி யாத்து நாடுபெரிது நந்தும்***
***. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .***
***பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்***
***யானை புக்க புலம்போலத்***
***தானும் உண்ணான் உலகமும் கெடுமே. (புறநானூறு, 184)***

*என்கிறது புறநானூறு. மன்னவன் அறநெறி தவறி வரியைப் பெறக் கூடாது என்று கலித்தொகையும் குறிப்பிடுகிறது. அத்தகு மன்னனின்கீழ் வாழும் குடிகள் துன்புற்றுத் துவண்டு வாடுதல் போலப் பாலை நிலத்து மரங்கள் சாய்ந்தன.*

***அலவுற்றுக் குடி கூவ, ஆறு இன்றிப் பொருள் வெஃகிக்,***
***கொலை அஞ்சா வினைவரல், கோல் கோடியவன் நிழல்***
***உலகு போல், உலறிய உயர் மர வெஞ்சுரம் (கலித்தொகை, 10)***

*என்பதைப் பதிவு செய்துள்ளது. நிலம் விளையாத போது வரி நீக்கம் செய்யப்பட்டதை வெள்ளக்குடி நாகனாரின் புறநானூற்று 35வது பாடல் விளக்குகிறது. சங்க கால இலக்கியங்களில் இடம்பெறும் வரி விலக்குகள் போலப் பல்லவர்காலச் செப்பேடுகளில் பல வரி விலக்குகள் செய்யப்பட்டதைப் பதிவு செய்துள்ளன.*

**யுவ மகாராஜன் சிவஸ்கந்தவர்மனுடைய மயிதவோலுச் செப்பேடு (கி.பி.305)**

*1899 ஆம் ஆண்டு குண்டூர் மாவட்டம் நரசராவ் பேட்டை தாலுக்காவில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மயிதவொலு என்னும் கிராமத்தில் கிடைத்த இச்சேப்பேடு எட்டு ஏடுகளைக் கொண்டது. இது பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. யுவ மகாராஜன் சிவஸ்கந்தவர்மன் 10 ஆம் ஆட்சி ஆண்டில் தலைநகர் காஞ்சிபுரத்திலிருந்து தன்னுடைய ஆயுள், தர்மம், வெற்றி ஆகியவை அதிகரிக்க வேண்டி அக்னிவேச கோத்திரத்தைச் சேர்ந்த பூர்வ கோட்டி ஆரியன், கோநந்தி ஆரியன் ஆகிய இருவருக்கும் ஆந்திரா நாட்டின் பக்கத்தில் உள்ள விரிபரம் என்னும் கிராமத்தை நில தானமாக அளித்ததைத் தனது கட்டுப்பாட்டில் உள்ள தான்ய கடத்தில் உள்ள தனது அதிகாரிக்குச்சொல்லிய கட்டளையைத் தெரிவிக்கிறது இச்சேப்பேடு.*

> *ஒரு பிரம்மதேயத்திற்கு (பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட ஊர்) என்னென்ன வரி விதிப்புகள் வழங்கப்பட்டு இருக்கிறதோ அத்தனையும் இந்த விரிபரம் கிராமத்திற்கும் பொருந்தும். மற்றவர்களுக்கு சோறு, தண்ணீர், கட்டில், தங்கும் இடம் தர வேண்டியது இல்லை. இதுவும் தவிர மற்ற பிரம்மதேயங்களுக்குத் தரப்பட்ட அத்தனை சலுகைகளும் வரி விலக்குகளும் இந்த கிராமத்திற்குப் பொருந்தும் (மு.ராஜேந்திரன், பல்லவர் காலச் செப்பேடுகள், ப.53)*

*என்று குறிப்பிடும் செப்பேட்டுச் செய்தி வழியாகப் பிரம்மதேய நிலங்களுக்கு வரி விலக்குகள் அளிக்கப்பட்டதை அறியலாம்.*

**சிம்ம வர்மனுடைய விழ வெட்டிச் செப்பேடு (கி.பி.446)**

*1928 ஆம் ஆண்டு நெல்லூர் மாவட்டம் கோவூர் தாலுகா வெவ்வேறு கிராமத்தில் கிடைத்த இச்செப்பேடு ஐந்து இதழ்கள் கொண்டது. எல்லா இதழ்களும் ஒரே அகலத்தில்*

உள்ளன. ஆனால் முதல் நான்கு ஏடுகள் ஒன்பது அங்குல நீளத்திலும் ஐந்தாவது ஏடு மட்டும் முக்கால் அங்குலம் குறைவாகவும் உள்ளது. செப்பேடுகள் இடதுபுறம் துளையிடப்பட்டு இரும்பு வளையத்தால் கோர்க்கப்பட்டுள்ளது. வளையத்தில் அரசு சின்னம் ரிஷபம் (காளை) ஒன்று இடது பக்கம் பார்ப்பது போல அமர்ந்து இருக்கிறது. சிம்ம வர்மனின் 10 வது ஆட்சி ஆண்டில் எழுதப்பட்ட இச்செப்பேட்டில் 32 வரிகள் உள்ளன.

இந்தச் செப்பேடு மூன்று விதங்களில் முக்கியமானது:

1. மற்ற செப்பேடுகளில் நில தானம் பெறுபவர்களுக்கு 18 வகையான (அஷ்டதச) பரிகாரங்கள் வரிகள் கட்டுவதில் இருந்து விலகளிப்பதாக சொல்லப்பட்டிருக்கும். அந்த 18 வரிகள் என்னென்ன என்று எந்த செப்பேட்டிலும் சொல்லப்படவில்லை இந்த செப்டேட்டில் 18 வகையான வரிகள் என்னென்ன என்று சொல்லப்பட்டிருக்கின்றன.
2. பல்லவ செப்பேடுகளில் நில தானத்தை பற்றிய தகவலில் அத்யஷ, சஞ்சரந்தர் முதலானோர் கிராமத்தாருக்குச் சொல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கும். ஆனால் இந்த செப்பேடு மட்டும் கூடுதலாக கிராமத்தின் க்ஷேத்திரத்திற்கும் சொல்ல வேண்டும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. க்ஷேத்திரம் என்ற சொலலுக்குக் குழு அல்லது சபை என்று பொருள். தமிழகப் பகுதியில் கிராம சபை இருந்ததாக இலக்கியங்களிலும் சாசனங்களிலும் அறிகிறோம். இந்தச் செப்பேட்டின் மூலம் முதன்முதலாக ஆந்திரப் பகுதியிலும் கிராம சபை செயல்பட்டதாக அறிய முடிகிறது.
3. கிராமத்தைப் பற்றிக் குறிக்கும் போது வட்டத்திலுள்ள கிராமம் என்று சொல்கிறது. வட்டம் என்பது தமிழ்ச்சொல். ஒன்றுக்கும் மேற்பட்ட கிராமங்களை வட்டம் என்று அழைக்கும் வழக்கம் கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் ஆந்திரப் பகுதியில் இருந்ததை இக்கல்வெட்டு வெளிப்படுத்தி நிற்கிறது.

சிம்மவர்மன் விழவெட்டி கிராமத்தை நிலதானமாக விஷ்ணு சர்மனுக்கு வழங்குகிறான். விஷ்ணுசர்மன் கீழ்க்கண்ட 18 வரிகள் செலுத்த வேண்டியது இல்லை எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> வகையான வரிகள் (அஷ்ட தச பரிகாரங்கள்) பின்வருமாறு: 1.லோகா சர்மக்கரர் - இரும்பு, தோல் வேலை செய்வோர் கட்டும் வரி. 2. ஆபரணப் பட்டுக்கார் - பட்டுத் துணி விற்பவர்கள் கட்டும் வரி. 3. பிரவாரஞ்சரர் - பெரிய சட்டைகள் உடுத்திக் கொண்டு சுற்றுபவர்கள் கட்டும் வரி. 4. ராஜி பிரத்திக் காரர் - நடனமாடுபவர், கழைக்கூத்தாடிகள் கட்டும் வரி. 5. ஆபணா-கடை வைத்திருப்போர் கட்டும் வரி. 6. ஆஜிவிகாஸ் - ஜைன துறவிகள் கட்டும் வரி. 7. நாஹலர் - ஜாதியை விட்டு, ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் கட்டும் வரி. 8. முகதரகர் - முகமூடி அணிந்து நாடகம் நடிப்பவர்கள் கட்டும் வரி. 9. கூபதர்சகர் - கிணறு வெட்டுவதற்கு முன்பு பூமியில் தண்ணீர் இருப்பதைப் பரிசோதிப்பவர் கட்டும் வரி. 10. தத்துவாயர் - நெசவாளர்கள் கட்டும் வரி. 11. டயூட்டா - சூதாடுபவர்கள் கட்டும் வரி. 12. ப்ரவரனச்சாரா - ஐமுக்காளம் பாய்விற்பவர்கள் உற்பத்தி செய்பவர்கள் கட்டும் வரி. 13. விவாகா -திருமணத்தின் போது செலுத்தும் வரி. 14. நாபிதா - முடிவெட்டுவோர் செலுத்தும் வரி. இது தவிர்த்துக் குடியானவர்கள் திருத்த வேண்டிய வரி, கைவினைவிளைஞர்கள், ஒற்றர்கள், நிலங்களை அளப்பவர்கள், கள் இறக்குபவர்கள் செலுத்த வேண்டிய வரிகளை நிலதானத்தைப் பெறும் விஷ்ணு சர்மன் கட்ட வேண்டியதில்லை. அரசனின் ஆணையை அதிகாரிகள் நடைமுறைப்படுத்த வேண்டும். (மு.ராஜேந்திரன், பல்லவர் காலச் செப்பேடுகள், பக்.68-69)

என்னும் செப்பேட்டுச் செய்தி வழியாக வரிகளின் பெயர்களும் எதற்கான வரி என்பதையும் தெளிவாக அறிய முடிகிறது.

**முதலாம் பரமேஸ்வர்மனுடைய உன்ன குரவய பாளையம் செப்பேடு (2.12.687)**

*நெல்லூர் மாவட்டம் பொதிலி தாலுகாவில் உள்ள உன்ன குரவய பாளையம் கிராமத்து முன்சீப் வீட்டில் இந்தச் செப்பேடு கிடைத்தது. மூன்று இதழ்களை உடையது. செப்பேடுகளை ஒரு செப்புக் கம்பி வளையம் இணைத்திருந்தது. சமஸ்கிருத மொழியில் தெலுங்கு - கன்னட எழுத்துக்களில் எழுதப்பட்ட இச்செப்பேட்டின் முத்திரையில் படுத்திருக்கும் ரிஷபத்தின் (காளை) உருவம் புடைப்புச் சிற்பமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. செப்பேடு முதலாம் பரமேஸ்வர்மனுடைய 19 ஆம் ஆட்சியாண்டு பஞ்சாங்கத்தின் உதவி கொண்டு டிசம்பர் 22 கி.பி.687 ஆண்டென்று கணிக்கப்படுகிறது.*

> *பூமி ராஷ்ட்டிரத்தில் முவுவட்டிய மார்க்கத்தில் முஸிணநதியின் தென்கரையில் உள்ள குபுணூரு என்ற கிராமத்தில் வாழும் கிராமத்தவர்களுக்கு விடுக்கும் கட்டளை இது: இந்த கிராமத்தின் எல்லா வரிகளும் விலக்கிக் கொள்ளப்படுகின்றன. இனிமேல் இது பிரம்மதேயமாகக் (பிராமணர்களுக்கு வழங்கப்பட்டதால்) கருதப்படும் (மு.ராஜேந்திரன், பல்லவர் காலச் செப்பேடுகள், ப.158).*

*தேவ சர்மன் என்னும் அந்தணருக்குத் தானமாக வழங்கிய செய்தியைச் செப்பேடு கூறுகிறது. பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரிவிக்கு அளிக்கப்பட்டதை உணர்த்துகிறது.*

**இரண்டாம் நந்திவர்மன் பட்டத்தாள் மங்கலம் (கொற்றக்குடி) செப்பேடு (கி.பி 792)**

*தமிழகத்தில் திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ள கொத்தங்குடி (கொத்தமங்கலம்) கிராமத்தில் கி.பி.1850இல் கண்டெடுக்கப்பட்டது. நந்திவர்மனின் 61வது ஆட்சி ஆண்டில் வழங்கப்பட்ட இச்செப்பேட்டின் ஐந்து இதழ்களில் 60 வரிகள் எழுதப்பட்டுள்ளன. முதல் 22 வரிகள் சமஸ்கிருதத்திலும் மீதம் 38 வரிகள் தமிழிலும் உள்ளன. இரும்பு வளையத்தில் கோர்க்கப்பட்ட இச்செப்பேட்டின் அரசு முத்திரை சிதைந்த நிலையில் இருந்தாலும் ரிஷபம் படுத்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.*

*இச்செப்பேடு அரசன் விஜய நந்தி விக்ரம பல்லவன் தனிக்கொற்றக்குடியில் 40 வேலி நிலத்தில் பிராமணர்களுக்குக் கொடுத்தது போக மீதம் நாலுவேலி நிலம் பெருமானடிகளுக்குப் பிரம்மதேயமாக வழங்கப்படுகிறது என்ற ஆணையை அரசன் சார்பாக ஆலம்பாக்க விசையநல்லூழான் நடைமுறைப்படுத்தினான் என்பதைக் கூறுகிறது. இதில்,*

> *அரசனுக்கு வட்டி நாழி, புதா நாழி, மன்று பாடும் ஊராட்சியும், தரகும், கூலமும், ஈழம் பூட்சியும், இடைப்பூட்சியும், நாடு காவலும், ஊடு போக்கும், உப்புக் கோச் செய்கையும், நல்லா, நல்லெருது, தேர்வாயம் போன்ற வரிகள் கட்ட வேண்டியதில்லை. இந்தப் புதிய கிராமத்திற்குப் பட்டத்தாள் மங்கலம் என்று பெயரிடப்பட்டுள்ளது. (மு.ராஜேந்திரன், பல்லவர் காலச் செப்பேடுகள், ப.239)*

*இச்சேப்பேடு 13 வகையான வரி விலக்குகள் பற்றிக் குறிப்பிடுகிறது.*

**அபராஜிதவர்மனின் வேலஞ்சேரிச் செப்பேடு (கி.பி.879)**

*1977 ஆம் ஆண்டு திருத்தணிக்கு அருகில் உள்ள வேலச்சேரியில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடு பல்லவ மன்னன் அபராஜிதவர்மனின் கி.பி.879 ஆம் ஆண்டைச் சேர்ந்தது. ஐந்து ஏடுகள் கொண்ட செப்பேடு செப்பு வளையத்தால் இணைக்கப்பட்டுள்ளது. செப்பு வளையத்தில் பல்லவர் அரசு சின்னம் காளை அமர்ந்த நிலையில் உள்ளது. அதன் இருபுறமும் குத்துவிளக்கும் எட்டு வகையான மங்கலப் பொருள்களும் இருந்தன. முதல்பகுதி சமஸ்கிருதத்திலும் பிற்பகுதி*

*தமிழிலும் உள்ளது. இது அரச கட்டளை. வாமனன் என்பவன் அரசரிடம் திருத்தணி நாட்டில் உள்ள புதூர் கிராமத்தை மேலிருஞ்செறு அக்ரஹாரத்திற்குத் தானமாகக் கேட்க பிரம்மாதி ராஜன் அரசரின் ஆணையை நிறைவேற்றியவன். இந்தக் கிராமத்தில் இருந்து ஆயிரம் காடி நெல் சூரியன், சந்திரன் இருக்கும் வரை மேல்மலைத்தணியல், குன்றவர்த்தனக் கோட்டத்தைச் சேர்ந்த திருத்தணியில் நின்று கொண்டிருக்கும் சுப்பிரமணியக் கடவுளுக்குத் தர வேண்டும். நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட கிராமத்தில் உள்ள நீர்நிலைகள், புன்செய் நிலங்கள், கிராமக் குடியிருப்புகள் மற்றும் மேய்ச்சல் நிலம், தோட்டம், ஏரி, கிணறுகள் அனைத்தும் தேவதான பிரம்ம தேயமாக மேலிருஞ்சேரி கிராம சபைக்கு வழங்கப்படுகிறது. இந்த கிராமத்திற்கான வரி விலக்குகள்;*

> *நெல்லுக்கான வரி, தங்கத்தின் மீதான வரி, ஊர்கலஞ்சு, ஊர் பங்காடி, நல்லா, நல்லெருது, நாடாட்சி, ஊடுபோக்கு, புதாநாழி, தரகு, தறி, ஈழப்பூட்சி, இடைப்பூட்சி தட்டு கை (மு.ராஜேந்திரன், பல்லவர் கால செப்பேடுகள், ப.282)*

*இவை போன்ற எந்த வரியும் அரசனுக்கு செலுத்த வேண்டியதில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பல்லவர்காலச் செப்பேடுகள் பல்லவர் கால வரலாற்றினை அறிய உதவும் காலக்கண்ணாடிகளாக திகழ்கின்றன. பல்லவர் காலச் செப்பேடுகள் தமிழ் மற்றும் சமஸ்கிருதம் என இரு பகுதிகளாக அமைந்துள்ளன. பல்லவர்களால் வழங்கப்பட்ட கொடைகள் விளைநிலங்களாகவும், கிராமங்களாகவும் இருந்துள்ளன. தானமாக வழங்கப்பட்ட நிலத்திலிருந்து உப்பு தோண்டுதல், படைவீரர் நுழைவு, புழுங்கல் அரிசி வழங்குதல், தண்ணீர் பானைகள், கட்டில்கள் மற்றும் குடியிருப்புகள் போன்ற பலவற்றிற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதைச் செப்பேடுகள் குறித்துள்ளன. பல்லவர் காலச் செப்பேடுகளில் காணப்படும் வரி விலக்குகள் அனைத்தும் பிரம்ம தேயங்களுக்கு (பிராமணர்களுக்கு வழங்கப்பட்டது) என்பதும் தெளிவாகிறது.*

**துணை நின்ற நூல்கள்**


1. *இரசமாணிக்கனார், மா., பல்லவர் வரலாறு, கற்பகம் புத்தகாலயம், சென்னை, 2010.*
2. *இராசமாணிக்கனார், மா., கலித்தொகை மூலமும் உரையும், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2011.*
3. *புலியூர்க் கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010.*
4. *ராஜேந்திரன், மு., பல்லவர் காலச் செப்பேடுகள், அகநி வெளியீடு, வந்தவாசி, 2015.*


## References


1. Rasamanikkanar, M., Pallavar Varalaru, Karpagam Puthakalayam, Chennai, 2010.
2. Rasamanikkanar, M., Kalithokai Moolamum Uraiyum, Poompuhar Publications, Chennai, 2011.
3. Puliyur Kesikan, Purananuru Moolamum Uraiyum, Sarada Publications, Chennai, 2010.
4. Rajendran, M., Pallavar Kala Sepedugal, Akani Publications, Vandavasi, 2015.